பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**19 12 2025** **FRIDAY** **6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளுக்கு பின்னர், வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

   **இதில் ஐந்து கோடியே **43** லட்சத்து **76** ஆயிரத்து **755** வாக்காளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

2. யோகா உலகின் ஆரோக்கியத்திற்கு வழிகாட்டியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக **127** கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

4. காங்கிரஸ் கட்சி வாக்கு வங்கி அரசியலுக்காக மட்டுமே தேசப்பிதா மகாத்மா காந்தியின் பெயரை பயன்படுத்துவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. **Wroclaw** செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Ilamparthi** தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு பின்னர் வரைவு வாக்காளர் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக் சென்னையில் இப்பட்டியலை வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசினார்.

வாக்காளர் திருத்தப்பணிகளுக்கு பின்னர் ஐந்து கோடியே 43 லட்சத்து 76 ஆயிரத்து 755 வாக்காளர்கள் உள்ளதாக அவர் கூறினார். 97 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் — அர்ச்சனா — 75 செகண்ட்ஸ்)*

அதிகபட்சமாக சோழிங்கநல்லூர் தொகுதியில்தான் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர் நீக்கப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இறந்தவர்கள், நிரந்தரமாக இடம்பெயர்ந்தவர்கள், பல தொகுதிகளில் பெயர் இடம்பெற்றது போன்ற காரணங்களுக்காக வாக்காளர்கள் பெயர் நீக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க இன்று முதல் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்காக சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளதாகவும் அவர் கூறினார்.

தகுதியுள்ள வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது என்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் கூறினார்.

<<<<<<>>>>>

யோகா உலகின் ஆரோக்கியத்திற்கு வழிகாட்டியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான சர்வதேச உச்சிமாநாட்டின் நிறைவு விழாவில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக ஐ நா ஜூன் 21-ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக அறிவித்தது என்றும் அவர் தெரிவித்தார்.

யோகா உலகம் முழுவதும் தற்போது பரவியிருப்பதாக அவர் கூறினார்.

பாரம்பரிய மருத்துவத்தின் ஒரு அங்கமாக யோகா உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

பாரம்பரிய மருத்துவ முறைகளில் ஆராய்ச்சி மற்றும் டிஜிட்டல் தொழிநுட்ப பயன்பாட்டை அதிகரிக்க வேண்டியதன் அவசியத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

துறைமுகங்களின் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா வலியுறுத்தியுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற உயர்நிலைக் கூட்டத்திற்கு தலைமை வகித்து அவர் பேசினார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

துறைமுக பாதுகாப்பு மையம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் திரு அமித் ஷா கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் ஊரக உள்ளாட்சி அமைப்புகளை வலுப்படுத்துவதற்காக **127** கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டிற்கான இரண்டாவது தவணையாக இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

15-ஆவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின்பேரில் இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

ஊரக வேலைவாய்ப்பு உறுதி மசோதா தொடர்பாக தேவையின்றி எதிர்க்கட்சிகள் அரசியல் செய்வதாக மத்திய அமைச்சர் திரு அர்ஜுன் ராம் மெஹ்வால் குற்றம்சாட்டியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார இயக்கம் குறித்த மசோதா, கிராமப்புற மேம்பாட்டை உறுதி செய்வதற்கான சீர்திருத்த நடவடிக்கையாகும் என்றார்.

தற்போதைய சூழலுக்கு ஏற்றவாறு திட்டங்களின் பெயர் மாற்றப்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

காங்கிரஸ் கட்சி வாக்கு வங்கி அரசியலுக்காக மட்டுமே தேசப்பிதா மகாத்மா காந்தியின் பெயரை பயன்படுத்துவதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், **100** நாள் வேலை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்ற நோக்கில் புதிய மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**125** நாட்கள் பணி வழங்கப்படுவதை இந்த மசோதா உறுதி செய்வதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாக்கள் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இந்த மசோதாக்கள் உத்வேகம் அளிக்கும் என்றார்.

இந்த கூட்டத்தொடர் ஆக்கப்பூர்வமாக அமைந்ததாகவும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

கரும்பு உற்பத்தியை அதிகரிக்க திமுக அரசு ஊக்கமளித்து வருவதாக மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் வேளாண் துறை சார்ந்த உயர் அலுவலர்கள் மற்றும் கரும்பு அறுவடை இயந்திர உற்பத்தியாளர்கள் பங்கேற்ற ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் சர்க்கரை ஆலைகளின் செயல் திறன் மேம்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சர்க்கரை ஆலைகள் நலிவடைந்த நிலையில் இருந்து மீண்டு வருவதாகவும் திரு ராஜேந்திரன் கூறினார்.

<<<<<<>>>>>>

காவல்துறை உயரதிகாரிகளின் இல்லங்களில் ஆர்டர்லிகளாக ஒருவர் இல்லை என காவல்துறை தலைவர் கூறுவதை ஏற்க முடியவில்லை என சென்னை உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு வந்த போது நீதிபதிகள் திரு எஸ் எம் சுப்பிரமணியம், திரு சி குமரப்பன் அமர்வு, இக்கருத்தை தெரிவித்தது.

இதற்கு பதிலளித்த தலைமை குற்றவியல் வழக்கறிஞர் திரு அசன் முகமது ஜின்னா, ஆர்டர்லிகளாக பணியில் இருப்பதாக புகார் பெறப்பட்டால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து தலைமைச் செயலர் மற்றும் உள்துறை செயலரை தாமாக முன்வந்து இணைத்த நீதிபதிகள், வழக்கை அடுத்த மாதம் 7 ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

கன்னியாகுமரி கடல் பகுதியில் சூறாவளி காற்று காரணமாக, விவேகானந்தர் நினைவு பாறை மற்றும் திருவள்ளுவர் சிலைக்கு செல்லும் படகு சேவை தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

---------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் மின் சிக்கன வார விழாவை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------

திண்டுக்கல் மாவட்டம் பழனி பாலாறு, பொருந்தலாறு அணையிலிருந்து இன்று முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

------------------

அனுமன் ஜெயந்தியை முன்னிட்டு, நாமக்கல் அருள்மிகு ஆஞ்சநேயர் திருக்கோவிலில் ஒரு லட்சத்து எட்டு வடைகளால் தயார் செய்யப்பட்ட மாலைகள் சார்த்தப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Wroclaw** செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் **Ilamparthi** தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.

தற்போது ஆறரை புள்ளிகளுடன் அவர் முதலிடத்தில் உள்ளார்.

------------------

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் **19** வயதுக்கு உட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Mithes Rameswaran** காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், **23-21, 21-19** என்ற செட் கணக்கில், டென்மார்க்கின் **August Kaldau -**வை வென்றார்.

-----------------

பங்களாதேஷ் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Nishu Malik — Muskan Sangwan** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், இந்த இணை **21-12, 21-15** என்ற செட் கணக்கில், இங்கிலாந்தின் **Cho Wai Lam —** கனடாவின் **Thalia Leann Se** இணையை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் நந்தகுமார் — ரத்ன சபாபதி இணையும், **Ian Lopes — Anuj Kale** இணையும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளன.

-----------------

**19** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்ற இப்போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா **8** விக்கெட் வித்தியாசத்தில் இலங்கையை வென்றது.

மழை பாதிப்பு காரணமாக **20** ஓவராக குறைக்கப்பட்ட இப்போட்டியில், முதலில் பேட் செய்த இலங்கை நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் **8** விக்கெட் இழப்பிற்கு **138** ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த இந்தியா **18** ஓவரில் **2** விக்கெட் இழப்பிற்கு **139** ரன் எடுத்து வெற்றிபெற்றது.

நாளை மறுநாள் நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் இந்தியா — பாகிஸ்தானை எதிர்கொள்கிறது.

-----------------

அகமதாபாதில் நடபெற்றுவரும் தென்னாப்பிரிக்காவுக்கு எதிரான ஐந்தாவது மற்றும் இறுதி டுவென்டி — டுவென்டி கிரிக்கெட் போட்டியில் முதலில் பேட் செய்துவரும் இந்தியா சற்றுமுன்வரை 11 புள்ளி ஐந்து ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 114 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<END>>>>>**